# தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் மானுட விழுமியங்களும் கலைக்கூறுகளும்

தொகுதி – II

பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் சு. குமரன்

முனைவர் சி. மகாலட்சுமி



# தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் மானுட விழுமியங்களும் கலைக்கூறுகளும்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் சு. குமரன்**<br>**முனைவர் சி. மகாலட்சுமி** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | டிசம்பர், 2015 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் - 641029. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476/1 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | X + 521 - 1136 |
| விலை | : | உரூ. 350/- |

**ISBN : 978 - 93 - 80800 - 59 - 2**


## International Conference on Elements of Arts and Human Values in Tamil Literature


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan. Dr. S. Kumaran**<br>**Dr. C. Mahalakshmi** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | December, 2015 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476/1, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | X + 521 - 1136 |
| Prize | : | **Rs. 350/-** |

158. **முனைவர் ச. கௌ. கவிதா** 735
நாட்டார் வழக்காறுகளில் கலைகள்

159. **முனைவர் ஜா. வளர்மதி** 741
நாலடியாரில் மானிடவியல் கூறுகள்

160. **முனைவர் செ. லலிதாம்பாள்** 746
இசைக்கலையோடு ஜோதிடம் மற்றும் எண்கணிதம் ஒப்பீடு

161. **சு. செந்தமிழ் செழியன்** 752
சங்க இலக்கியத்தில் சமூக விழுமியங்கள்

162. **வ. மணிகண்டன்** 756
சோழர்கால சிற்பக்கலையும் ஆடற்கலையும்

163. **வ. பாக்கியராஜ்** 761
நெடுநல்வாடை காட்டும் கட்டடக்கலை

164. **டாக்டர் இ.ஆர். இரவிச்சந்திரன்** 767
திருக்குறள் காட்டும் மானுட விழுமியங்கள்

165. **முனைவர் ந. விஜயசுந்தரி** 772
உலோச்சனார் பாடல்களில் நெய்தல் திணை சித்திரிப்பு

166. **முனைவர் ஜெ. தேவி** 777
பௌத்தம் காட்டும் வாழ்வியல் விழுமியங்கள்

167. **சு. வித்யா** 783
அற இலக்கியங்கள் நவிலும் தனிமனித விழுமியங்கள்

168. **பேரா. கு. லட்சுமி** 787
படிமத்தின் வழி பழந்தமிழரின் இல்லற வாழ்வியல்

169. **மு. ஜெயலட்சுமி** 791
கண்ணதாசன் திரையிசைக் காதற் பாடல்களில் பக்தி நெறி

170. **இரா. கஸ்தூரி** 796
மானுடமும் விழுமியக் கல்வியும்

171. **முனைவர் க. முருகேசன்** 801
அகல் விளக்கில் ஒளிரும் அன்புசார் விழுமியங்கள்

172. **இரா. தேவி** 80
விழுமியங்களும் கலைக்கூறுகளும்
(மணிமேகலை, புறநானூறு)

173. **செ. சிபிவெங்கட்ராமன்** 81
புறநானூற்றில் விருந்தோம்பல்

174. **ஜெ. ஜெயசாந்தி** 81
அருளவதாரத்தில் மானுட விழுமியங்கள்

175. **முனைவர் மா. பே**
காலச்சக்கர(ம்)மும்

176. **வி. வசுமதி**
மின் வெட்டு வேண்
விழுமியமும் கலைக்

177. **முனைவர். இரா.**
ஆசாரக்கோவை வலி

178. **மு. செண்பகவள்ளி**
ஔவையார் சுட்டும்

179. **வ. மீனாட்சி**
ஆடவல்லான் ஆடிய

180. **முனைவர் கோ.ப. ந**
சித்தர் பாடல்களில் மா

181. **ஆ. தர்மராஜன்**
தோப்பிலாரின் துறைமு
வியாபாரமும் தொழில்

182. **முனைவர் அரங்க. ஜ**
மானுட விழுமியங்களில்

183. **முனைவர் க. மைதிலி**
தமிழரின் மரபுசார் தொ
உலோகப்பயன்பாடு

184. **க. பாத்திமா**
அகரவித்தில் மானுட வி

185. **முனைவர் வெ. விஜய**
திருநாவுக்கரசரின் தேவார

186. **முனைவர் எஸ். குமரன்**
புறநானூற்றில் மானுட வி

187. **தி. உமாபதி சிவகுமார்**
முதுரையில் காணலாகும்

188. **முனைவர் மோ. பேபி**
ஊடகங்களில் விளம்பரத்தி

189. **ச. வீரபத்திரன்**
புறநானூற்றில் சமுதாய வி

190. **வே. அம்சவேணி**
குறுந்தொகையில் காணலா
விழுமியங்களும் கலைக்கூறு

# 171. அகல் விளக்கில் ஒளிரும் அன்புசார் விழுமியங்கள்



**முனைவர் க. முருகேசன்**
*தமிழ்த்துறைத் தலைவர்*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

மானுடப் பிறப்பின் மகத்துவத்தைத் தெளிவாக உணர்ந்து கொண்டு, என்றைக்கும் நேர்வழிப் பயணமும் அதன்வழியான வெற்றியுமே இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்த சான்றோர் வரிசையில் தனியிடம் பெற்றவர் மு.வரதராசனார். 1912 ஆம் ஆண்டில் மண்ணுலகில் முகம் காட்டி 1974ல் பூதஉடலைப் புகழுடம்பாக்கிக் கொண்ட பெருமகனார் தான் வாழ்ந்த 62 ஆண்டு கால வாழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட படைப்புக்களைத் தமிழன்னைக்குக் காணிக்கையாகப் படைத்துள்ளார் என்றால் அவருடைய வாழ்வு அமரவாழ்வுதான். தமிழ் இலக்கியத்தில் முதன்முதலாக முனைவர் பட்டம் பெற்றவர் என்ற பெருமையும், பன்முகப் படைப்பாளி என்ற படைப்புத்திறனும், பன்மொழிப்புலமையும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற இச்சான்றோரின் உள்ளத்து வயல்வெளியில் உதித்தெழுந்த விளைச்சல்களில் ஓங்குபுகழ் பெற்ற பெருமை "அகல் விளக்கு" புதினத்திற்கு உண்டு. காலத்தின் தேவைக்கேற்ற படைப்புதான் காலத்தை வென்று நிற்கும் என்பதற்குச் சான்றாக விளங்கக் கூடிய "சாகத்திய அகாதெமியின்" விருதைப் பெற்றுள்ள இப்புதினத்தின் காணக்கிடைக்கும் அன்புசார் மானுட விழுமியங்களைப் புலப்படுத்திக் காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகின்றது.

## நட்பில் நனைதலும் அன்பில் அரவணைத்தலும்

அடைக்குந்தாழ் ஒன்றில்லாத பெருங்கடல் நட்பு என்பதையும், நண்பன்தான் உயிர் என்றும் அவனுக்காக வாழ்வதில் இன்பமிருக்கிறது என்பதையும் வேலய்யன் உணர்ந்து கொண்ட அளவுக்குச் சந்திரன் புரிந்துகொள்ளவில்லை. "சந்திரனுடைய அறிவும் அழகும் தவிர, அவனுடைய வாழ்க்கையில் நல்லவை வேறு இல்லை என்று எண்ணினேன்" (மு.வ.,அகல் விளக்கு, ப.113) என்ற வேலய்யனின் கூற்று சந்திரனின் குணங்களைக் காட்டுகின்றது. வாலாசாவில் இருந்தபோது அனைத்து வகையிலும் வேலய்யனைப் போலவே நடந்து. அவனுக்கு உற்ற தோழனாக இருந்த சந்திரனிடத்தில் ஏற்பட்ட மாறுதல்களைக் கண்டு உள்ளம் நொந்தபோது இடித்துரைத்துத் திருத்த வேண்டிய கட்டுப்பாடு தனக்கு இருந்தும் அதைச் செய்தபோதும் ஏற்றுக் கொள்ளாத மறுதலிக்கும் மனப்பாங்கு சந்திரனிடம் இருந்ததால் வேலய்யனின் செயல்கள் பயனற்றுப் போயிற்று.